**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8093882

1. District மாவட்டம் : திருச்சி    PS: காவல்நிலையம் [illegible]    Year: ஆண்டு 2019    FIR No.: மு.த.அ. எண் 05    Date: நாள் 19.03.2019

2. (i) Act சட்டம்: கு.வி.மு.ச    Sections பிரிவுகள்: 102
   (ii) Act சட்டம்: [illegible] (Amendment) சட்டம் 2018    Sections பிரிவுகள்: 7(A)
   (iii) Act சட்டம்:    Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்    Date from : நாள் முதல் 13.12.18    Date to : நாள் வரை 13-12-18
   Time Period : நேர அளவு    Time from : நேரம் முதல் 17.45    Time to : நேரம் வரை 21.30
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 14.12.2018    Time : நேரம் 10.30
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்    Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக : கம்ப்யூட்டரில் டைப் செய்யப்பட்டது.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் : சுமார் 2 கி.மீ வடக்கு
   Beat Number : முறைக் காவல் எண்    (b) Address : முகவரி : சார் பதிவாளர் அலுவலகம், லால்குடி, திருச்சி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் : —    District : மாவட்டம் : —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் : திருமதி. தமிழ்செல்வி    (b) Father's/ ~~Husband~~'s Name : தந்தை / கணவர் பெயர் : [illegible]
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு : 1965    (d) Nationality : நாட்டினம் : இந்தியன்    (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் :
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்    Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் : [illegible]    (g) Address : முகவரி : மாவட்ட [illegible] அலுவலகம், திருச்சிராப்பள்ளி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   — மேல் பக்கம் குறிப்பிடப் பட்டுள்ளது —

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   [illegible] பதிவு செய்யப்படுகிறது

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்கு சிறப்பு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது.

காலம் 7ல் கண்ட எதிரிகளின் பெயர்கள்

1) ச.சதீஸ், வயது–28/2018, த/பெ.சரவணன், எண்.6, கிழக்கு அக்ரஹாரம், லால்குடி தாலுக்கா, திருச்சி மாவட்டம்.
2) ப.ராஜசேகர், வயது.57/2018, த/பெ.பழனிவேல், எண்.3/2, மேலவீதி, லால்குடி தாலுக்கா, திருச்சி மாவட்டம்.
3) ந.முருகானந்தம், வயது.46/2018, த/பெ.நல்லமுத்து, எண்.3/28ஏ, தத்தனூர், லால்குடி தாலுக்கா, திருச்சி மாவட்டம்.
4) ச.பெர்னான்டஸ் (எ) டேவிட் 58/2018, த/பெ.சவரிமுத்து, எண்.80/33எப், வடக்கு காமராஜர் நகர், ஆங்கரை, லால்குடி தாலுக்கா, திருச்சி மாவட்டம்.
5) நா.சேகர், வயது.40/2018, த/பெ.நாகராஜ், பழையத் தெரு, பம்பரம்சுத்தி, மாந்துறை. லால்குடி தாலுக்கா, திருச்சி மாவட்டம்.
6) ச.செங்கமலை, வயது.68/2018, த/பெ.சந்தியப்பன், புதுர்பாளையம் போஸ்ட், புள்ளம்பாடி, லால்குடி, திருச்சி மாவட்டம்.
7) சி.விஸ்வநாதன், வயது.61/2018, த/பெ.சிங்காரவேலு, எண்.68, திருவதிள்ளுவர் நகர், லால்குடி தாலுக்கா, திருச்சி மாவட்டம்

(தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ………………… Rank ………………… to take up the Investigation / Refused investigation / transferred to PS……………………………………….on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ………………………… பதவி ………………… நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ……………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer In-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
(E. XAVIER RANI)
Inspector of Police,

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
19/03/19 at 17.00 hrs.

Name: பெயர் ……………………
Rank: நிலை ……………………No எண் ……

**திருச்சி ஊ.த.க. பிரிவு கு.எண். 05/2019—ன் முதல் தகவல் அறிக்கை தொடர்ச்சி.......**

திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் 14.12.2018ஆம் தேதி காலை 10.30 மணியளவில் அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, திருமதி.தமிழ்செல்வி, முதல்நிலை வருவாய் ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், திருச்சி மாவட்டம் என்பவர் நிலையம் ஆஜராகி 13.12.2018ம் தேதி திருச்சி மாவட்டம், லால்குடி சார் பதிவாளர் அலுவலகத்தில் திடீர் சோதனை செய்தபோது தயார் செய்யப்பட்ட திடீர் சோதனை செயல்முறையின் மீது (மகஜர்) நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகோள் கடிதம் கொடுத்தார். மேற்படி, திடீர் செயல்முறையினை (மகஜர்) சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநரகத்திற்கு அனுப்பி, சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநரக நமுனா எண்.SC No.45156/2019/Regn/TR, dt.21.02.2019ன் படி அனுமதி பெற்று வழக்கு பதிவு செய்யப்படுகிறது, அதன் விபரம் பின்வருமாறு: அனுப்புநர் சா.தமிழ்செல்வி, வயது 53/18, த/பெ சாத்தையா, முதல்நிலை வருவாய் ஆய்வாளர், மாவட்ட ஆய்வு குழு அலுவலகம், திருச்சிராப்பள்ளி. பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருச்சிராப்பள்ளி. அய்யா, பொருள்: திருச்சி – லால்குடி சார்பதிவாளர் அலுவலக –திடீர் சோதனை மேற்கொண்டது–மேல் நடவடிக்கை எடுக்க வேண்டி.... திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் 13.12.2018ஆம் தேதி, மாலை 04.30 மணியளவில் திருச்சி, ஊ.த.க பிரிவு அலுகலத்திலிருந்து, திருச்சி ஊ.த.க பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.சேவியர்ராணி மற்றும் விஜிலென்ஸ் குழுவினருடன் அலுவல் சாட்சி திரு.பாரதிதாசன், கிராம நிர்வாக அலுவலர், வெள்ளி திருமுத்தம் ஸ்ரீரங்கம் தாலுக்கா, திருச்சிராப்பள்ளி ஆகியோருடன் புறப்பட்டு, திருச்சி மாவட்டம், லால்குடி சார்பதிவளார் அலுகலகத்தில் 17.15 மணிக்கு திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது, மேற்கண்ட சோதனையின் போது ரூ.1,28,065/—ஐ கைப்பற்றப்பட்டு, திடீர் சோதனை செயல்முறைகள் (மகஜர்) 17.45 மணி முதல் 21.30 மணிவரை தயார் செய்யப்பட்டது. மேற்படி திடீர் சோதனை செயல்முறைகளின்படி (மகஜர்) நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. இத்துடன் 13.12.2018ஆம் தேதி தயார் செய்யப்பட்ட திடீர் சோதனை செயல்முறைகள் (மகஜர்) இணைக்கப்பட்டுள்ளது. தங்கள் உண்மையுள்ள Sd.xxxx S.தமிழ்செல்வி, RI,14/12/2018. **திடீர் சோதனை செயல்முறை (மகஜர்)** இன்று 13.12.2018 மாலை 17.45 மணிக்கு திருச்சி மாவட்டம், லால்குடி பகுதியில், பழைய நீதிமன்ற வளாகத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள லால்குடி சார்பதிவகத்தை திருமதி.தமிழ்செல்வி, முதல்நிலை வருவாய் ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், திருச்சிராப்பள்ளி, திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திரு.சேவியர்ராணி மற்றும் அவரது குழுவினர் உதவியுடன் வேண்டுகோளின்பேரில் வந்திருந்த அலுவல் சாட்சி திரு.பாரதிதாசன், கிராம நிர்வாக அலுவலர், வெள்ளிதிருமுத்தம் கிராமம், ஸ்ரீரங்கம் தாலுக்கா முன்னிலையில் மேற்கொள்ளும் திடீர் சோதனையின் செயல்முறை நடவடிக்கைகள் பொருத்து மடிக்கணினி மூலம் தயார் செய்யப்படும் செயல்முறை நடவடிக்கை மகஜர். திருச்சி மாவட்டம், லால்குடி பகுதியில், பழைய நீதிமன்ற வளாகத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள லால்குடி

சார்பதிவகத்தில், பதிவு உள்ளிட்ட ஏனைய அரசு அலுவல்களை செய்து கொடுக்க கூ சார்பதிவக பணியாளர்கள், நேரிடையாகவும், ஆவண எழுத்தர்கள் மற்றும் இடைத்தரகர்கள் மூலமாகவும் கையூட்டு கேட்டுப்பெறுவதாக கிடைத்த தகவலின் பேரில், இன்று 13.12.2018 மாலை சுமார் 17.15 மணிக்கு கூ அலுவலர்கள் கூ சார்பதிவக அலுவலகத்தை முன்னறிவிப்பின்றி திடீர் சோதனை செய்வதற்கு கூ சார்பதிவக அலுவலக முன்பக்க பிரதான கதவு வழியே உள்ளே நுழைந்ததும் கூ சார்பதிவகத்தை சுற்றி நான்கு திசைகளிலும் காவலர்களை பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டது. அடுத்து சார்பதிவகத்தின் உள்ளே நுழைந்ததும் கிழக்கு மேற்காக வராண்டாவும், அதன் உள்ளே நுழைந்ததும் பெரிய ஹாலும் அதன் மையத்தில் தெற்கு பார்த்து வடக்கு ஓரத்தில் சார்பதிவாளர் அமர்ந்திருக்கும் உயரமான மேடை பகுதி உள்ளது. அதில் மேற்கு புறமாக உள்ள இருக்கையில் ஒரு நபர் அமர்ந்திருந்தார், அவர் ஆவணங்களில் ஏதோ எழுதிக்கொண்டிருந்தார். கிழக்கு பகுதியில் உள்ள இருக்கையில் ஒரு நபர் அமர்ந்திருந்தார். அவர் முன்பு கணிணியில் வேலை செய்துகொண்டிருந்தார். அலுவலகத்தின் உள்ளே சுமார் 30-க்கும் மேற்பட்ட நபர்கள் ஆங்காங்கே நின்று கொண்டிருந்தார்கள். அலுவலகத்தின் அனைத்து அறைகளுக்கும் காவலர்களை அனுப்பி பாதுகாப்புக்காக நிற்க செய்யப்பட்டது. சார்பதிவாளர் மற்றும் அங்கு பணியாற்றும் பணியாளர்கள் அனைவருக்கும், வந்திருக்கும் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு குழுவினரையும், திடீர் சோதனை செய்ய வந்த விபரத்தையும் கூறி சோதனை தொடங்கப்பட்டது. சார்பதிவாளர் பெயரை கேட்க அவர் தன் பெயர் திருமதி.ஹேமலதா பாய், சார்பதிவாளர் என்றும், கரூர் மாவட்டம், நங்கவரம் சார்பதிவாளர் என்றும், அயல்பணியாக லால்குடி சார் பகராண்மையாக (Deputation) பணிபுரிவதாக தெரிவித்தார். அலுவலக அவரின் இருக்கைக்கு எதிரே சுமார் நான்கைந்து பேர் நின்று அவரிடம் பேசிகொண்டிருந்தார்கள் அந்த ஹாலில் தெற்கே வரிசையாக ஐந்து இருக்கைகள் போடப்பட்டிருந்தது. சார்பதிவாளர் அறையின் கிழக்குபுறம் கண்ணாடியினாலான குளிரூட்டப்பட்ட கணிப்பொறி அறை இருந்தது. அதில் 2 பெண்கள் இருந்தார்கள். அந்த கணிப்பொறி அறையினுள் அவர்கள் அலுவலகத்தில் இருந்ததற்கான காரணம் குறித்து கேட்க தங்களது பெயர் செல்வி.தமிழ்செல்வி, த/பெ.பழனியாண்டி என்றும், செல்வி.சீதா, த/பெ.சந்தானம் என்றும் தாங்கள் தினக்கூலியாக பணிபுரிவதாக தெரிவித்தார்கள். மேலும், சார்பதிவாளர் பதிவு செய்யும் மேடை அருகே நின்று உதவி செய்து கொண்டிருந்த நபர் குறித்து கேட்க அவர் தனது பெயர் திரு.பாலாஜி, த/பெ.தமிழரசன் என்றும், தான் தினக்கூலியாக பணிபுரிவதாக தெரிவித்தார். கூ அலுவலக பெரிய ஹாலின் கணிப்பொறி அறைக்கு கீழ்புறம் உதவியாளர் இருக்கை உள்ளது அதில் ஒரு பெண் அமர்ந்து அலுவல் செய்து கொண்டிருந்தார். அவர் அருகே இரண்டு பெண்கள் உட்பட மூன்று நபர்கள் நின்றுகொண்டிருந்தார்கள். கூ ஹாலின் வடபுறம் மற்றும் மேற்குபுறம் இரண்டு பதிவேடுகள் அறை உள்ளது. அதில் வடபுறம் அறையில் 1 நபர் நின்று கொண்டிருந்தார். அலுவலகம் முழுவதும் மின்வசதி செய்யப்பட்டிருந்தது. மேலே கூறப்பட்ட சார்பதிவாளர் ஹால் கணிப்பொறிஅறை மற்றும் பதிவேடு அறைகளில் நின்றிருந்தவர்களை விசாரித்து அவர்களில் பதிவுக்கு வந்திருந்த பொதுமக்களை மட்டும் விசாரித்து அவர்களை வெளியில் சென்று காத்திருக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது. பதிவு தொடர்பற்ற சார்பதிவாளர் அலுவலகத்திற்குள்ளே வருவதற்கு வேறு

எந்த காரணமும் இல்லாத 7 ஆவண எழுத்தர்கள், இடைத்தரகர்களை ஆய்வுக்குழு அலுவலர், அவர்களின் பெயர் முகவரி கேட்டு விசாரிக்க, அவர்கள் சார்பதிவாளர் அலுவலகத்திற்குள் வந்ததற்காக சொன்ன காரணம் ஆய்வுக்குழு அலுவலருக்கு திருப்திகரமாக இல்லாததால் அவர்களை காவலர்கள் உதவியுடன் சோதனை செய்ய ஒவ்வொரு நபரிடமும் கீழே கண்டவாறு அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்களுக்கு கையூட்டாக கொடுக்க வைத்திருந்த பணமும், தனியாக சொந்தப்பணமும் வைத்திருந்தது தெரியவந்தது. அதன் விபரம்

| வ. எண் | பெயர், முகவரி | கையூட்டாக கொடுக்க வைத்திருந்த பணமும் வைத்திருந்த இடமும் | சொந்தப்பணம் இருந்த இடம் |
|---|---|---|---|
| 1 | ச.சதீஸ், வயது–28/2018,<br>த/பெ.சரவணன்,<br>எண்.6, கிழக்கு அக்ரஹாரம்,<br>லால்குடி தாலுக்கா, திருச்சி மாவட்டம்.<br>(D.W.L.No.A1/AYR/2018 தந்தை பெயரில் உள்ளது) | ரூ. 19,000/–<br>பேண்டின் வலது புற பாக்கெட் | ரூ. 200/–<br>மேல் சட்டையின் இடது புற வெ…ப்பாக்கெட் |
| 2 | ப.ராஜசேகர், வயது.57/2018,<br>த/பெ.பழனிவேல்,<br>எண்.3/2, மேலவீதி,<br>லால்குடி தாலுக்கா, திருச்சி மாவட்டம்.<br>D.W.L.No.A1/ARI/2016 | ரூ. 1150/–<br>பேண்டின் வலது மற்றும் இடது புற பாக்கெட்டுகள் | ரூ. 150/–<br>மேல் சட்டையின் இடது புற வெ…பாக்கெட் |
| 3 | ந.முருகானந்தம், வயது.46/2018,<br>த/பெ.நல்லமுத்து,<br>எண்.3/28ஏ, தத்தனூர்,<br>லால்குடி தாலுக்கா, திருச்சி மாவட்டம்.<br>D.W.L.No.17/B/AYR/1999 | ரூ. 1,400/–<br>பேண்டின் இடது புற பாக்கெட் | ரூ. 200/–<br>மேல் சட்டையின் இடது புற உள்பாக்கெட் |
| 4 | ச.பெர்னான்டஸ் (எ) டேவிட் 58/2018,<br>த/பெ.சவரிமுத்து,<br>எண்.80/33எப், வடக்கு காமராஜர் நகர்,<br>ஆங்கரை, லால்குடி தாலுக்கா,<br>திருச்சி மாவட்டம்.<br>D.W.L.No.64/AYR/1980 | ரூ. 18,000/–<br>மேல் சட்டையின் இடது புற வெ…பாக்கெட் | ரூ. 210/–<br>மேல் சட்டையின் இடது புற உள் பாக்கெட் |
| 5 | நா.சேகர், வயது.40/2018,<br>த/பெ.நாகராஜ்,<br>பழையத் தெரு, பம்பரம்சுத்தி, மாந்துறை,<br>லால்குடி தாலுக்கா, திருச்சி மாவட்டம். | ரூ. 43,000/–<br>மேல் சட்டையின் இடது புற வெ…பாக்கெட் | ரூ. 130/–<br>மேல் சட்டையின் இடது புற உள் பாக்கெட் |
| 6 | ச.செங்கமலை, வயது.68/2018,<br>த/பெ.சந்தியப்பன்,<br>புதுர்பாளையம் போஸ்ட், புள்ளம்பாடி, லால்குடி,<br>திருச்சி மாவட்டம். | ரூ. 6000/–<br>பேண்டின் வலதுபுற பாக்கெட் | ரூ. 315/–<br>மேல் சட்டையின் இடது புற வெ…பாக்கெட் |
| 7 | சி.விஸ்வநாதன், வயது.61/2018,<br>த/பெ.சிங்காரவேலு,<br>எண்.68, திருவதிள்ளுவர் நகர்,<br>லால்குடி தாலுக்கா, திருச்சி மாவட்டம் | ரூ. 34,000/–<br>மேல் சட்டையின் இடது புற உள்பாக்கெட் | ரூ. 600/–<br>மேல் சட்டையின் இடது புற வெ…பாக்கெட் |

மேலே கண்ட வரிசை எண் 1 முதல் 7 நபர்களிடமும் உள்ள சொந்த பணம் தவிர, மற்ற பணம் பற்றி ஆய்வுக்குழு முதல் நிலை வருவாய் ஆய்வாளர் விசாரிக்க, அவர்கள், தாங்கள் அந்த பணத்தை பற்றி கேட்க சரியான காரணம் சொல்லாததால் மேற்படி பணம் சார்பதிவகத்தில் பணிபுரிபவர்களுக்கு கையூட்டாக கொடுக்க வைத்திருக்கலாம் என்ற அடிப்படையில் மேற்படி பணம் ரூ.1,22,550/– ஆய்வாளர் திருமதி.சேவியர்ராணி அவர்களால் இந்த திடீர் சோதனையில் மேல்நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது. தொடர்ந்து அலுவலகத்தின் அனைத்து அறைகளையும் சோதனை செய்ய சார்பதிவாளர் இருக்கைக்கு கிழக்கே தனித்தனியாக மடித்து சுருட்டப்பட்ட நிலையில் 500, 100, 50, 10 ரூபாய் நோட்டுக்கள் கத்தையாக மடித்து சொருகப்பட்டிருந்தது. அவற்றை எடுத்து எண்ணிப்பார்க்க அதில் ரூ.1,500/– இருந்தது, இந்த இடத்தில் கிடந்த பணத்தை பற்றி யாருக்கு சொந்தமான பணம் யார் அங்க போட்டது என்று விபரம் கேட்க, அந்த பணத்தை தன்னுடைய பணம் தான் என்று யாரும் கூற முன்வரவில்லை. அலுவலகத்திற்குள்ளே கேட்பாரற்று கிடந்த அந்த பணம் மொத்தம் ரூ.1,500/–ம் ஆய்வாளர் திருமதி.சேவியர்ராணி அவர்களால் இந்த திடீர் சோதனையின் மேல்நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது. கணிப்பொறி அறையில் இன்று வசூல் செய்யப்பட்ட அரசு பதிவுக்கட்டணங்களின் மொத்த பதிவுகளையும் அதற்கு வசூல் செய்யப்பட்ட தொகையையும் சரிபார்த்ததில் 'அ' கணக்கில் வரைவோலையாக பெறப்பட்ட 29 வரைவோலைகளின் மொத்தம் ரூ.2,13,210/–ம், ரொக்கமாக ரூ.2,125/–ம் சரியாக இருந்தது, பிரிவு 41 கணக்கில் வரைவோலையாக பெறப்பட்ட 14 வரைவோலைகளின் மொத்தம் ரூ.57,610/–ம், ரொக்கமாக ரூ.2,375/–ம் சரியாக இருந்தது, உட்பிரிவு கணக்கில் இருக்க வேண்டிய ரொக்கம் மட்டும் ரூ.800/–ம், CD கணக்கில் இருக்க வேண்டிய ரொக்கம் ரூ.1,650/–ம், D கணக்கில் இருக்க வேண்டிய ரூ.8,489/–க்கு அதனை வசூல் செய்த தகவல் தொகுப்பு பணியாளர் திரு.சரவண செல்லமுத்து வசம் ரூ.12,504/– இருந்தது, அதாவது அரசு பணம் இருக்க வேண்டிய கையிருப்பிலிருந்து ரூ.4,015/– கூடுதலாக இருந்தது.

இதில் D கணக்கில் மட்டும் ரூ.4,015/– கூடுதலாக இருந்ததற்கு அன்றைய தினம் அதை வசூல் செய்த தகவல் தொகுப்பு பணியாளர் திரு.சரவண செல்லமுத்துவை கேட்க பணம் கூடுதலாக இருந்ததற்கு சரியான விளக்கம் சொல்லவில்லை. அந்த பணத்தை சார்பதிவகத்தில் பணிபுரிபவர்களுக்கு கையூட்டாக கொடுக்க, பெற்று வைத்திருக்கலாம் என்ற அடிப்படையில் பணம் ரூ.4,015/– ஆய்வாளர் திருமதி.சேவியர்ராணி அவர்களால் இந்த திடீர் சோதனையில் மேல்நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது.

மேலே கண்ட தொகைகள் அதாவது ரொக்கம் ரூ.15,439/– மற்றும் வரைவோலைகள் மொத்தம் ரூ.2,70,820/–ம் அரசு கணக்கில் செலுத்த சார்பதிவாளரிடம் ஒப்படைத்து ஒப்புதல் பெறப்பட்டது. சார்பதிவாளர் முதற்கொண்டு அலுவலகத்தில் உள்ள மற்ற அனைத்து நிரந்தர மற்றும் தற்காலிக பணியாளர்களில், பெண் பணியாளரை பெண் காவலர் மூலமும் மற்றவர்களை ஆண்காவலர்கள் மூலமும் சோதனை செய்து பார்க்க அவர்கள் சொந்த செலவிற்காக வைத்திருந்த சொற்ப தொகைகளை தவிர வேறு பணம் எதுவும் இல்லை. ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க கணிணியில் பதிவிறக்கம் செய்யப்பட்ட 13.12.2018 ஆம் தேதிக்கான A கணக்கு விபரம், பிரிவு 41 கணக்கு விபரம், உட்பிரிவு

கணக்கு விபரம், CD கணக்கு விபரம் மற்றும் D கணக்கு விபரம் ஆகியவைகளை உண்மை நகலிட்டு பெறப்பட்டது. மேலும், லால்குடி சார்பதிவாளர் அலுவலக 2018 ஆம் ஆண்டு வருகைப்பதிவேட்டை கேட்க கூஷி சார்பதிவாளர் திருமதி.ஹேமலதாபாய் ஆஜர் செய்தார். அப்பதிவேட்டில் 2018 ஜனவரி மாதம் 1ம் தேதி முதல் 13.12.2018 தேதிவரை குறிப்புகள் காணப்பட்டது. லால்குடி சார்பதிவக அலுவலர்களின் கையிருப்பு பதிவேட்டை கேட்க கூஷி சார்பதிவாளர் திருமதி.ஹேமலதாபாய் ஆஜர் செய்தார். அப்பதிவேட்டில் 2018 ஜனவரி மாதம் 1ம் தேதி முதல் 13.12.2018 தேதிவரை குறிப்புகள் காணப்பட்டது. மேலும், லால்குடி சார்பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரிந்த தகவல் தொகுப்பு பணியாளரின் 2018 ஆம் ஆண்டு வருகைப்பதிவேட்டை கேட்க கூஷி சார்பதிவாளர் திருமதி.ஹேமலதாபாய் ஆஜர் செய்தார். அப்பதிவேட்டில் 06.11.2017 முதல் 13.12.2018 தேதிவரை குறிப்புகள் காணப்பட்டது. அப்பதிவேடு இந்த திடீர் சோதனையின் மேல்நடவடிக்கைக்காக ஆய்வாளர் திருமதி.சேவியர்ராணி அவர்களால் கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் சோதனை இரவு 21.30 மணிக்கு முடிக்கப்பட்டது.

மேற்படி வேண்டுகோள் கடிதம் நாள் 14.12.2018 உடன் கூடிய திடீர் சோதனை செயல்முறை(மகஜர்) மற்றும் சென்னை, ஊ.த.க துறை இயக்குநரக நமுனா எண்.SC No.45156/2019/REGN/TR Dt.21.02.2019-ன் படியும் மகஜரில் உள்ள எதிரிகளான தனிநபர்கள் 1) ச.சதீஸ், 2) ப.ராஜசேகர், 3) ந.முருகானந்தம், 4) ச.பெர்னான்டஸ் (எ) டேவிட், 5) நா.சேகர், 6) ச.செங்கமலை மற்றும் 7) சி.விஸ்வநாதன், ஆகியோர் மீது திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 05/2019 ச/பி 102 Cr.P.C & 7(A) of Prevention of Corruption (Amendment) Act 2018 ன்படி வழக்கு பதிவு செய்யப்படுகிறது.

இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை அசல் மற்றும் திருச்சி மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திருமதி தமிழசெல்வி அவர்கள் கொடுத்த 14.12.2018 தேதியிட்ட கடிதம் மற்றும் 13.12.2018 தேதியில் தயார் செய்யப்பட்ட திடீர் சோதனை செயல்முறை(மகஜர்) ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்கு சிறப்பு நீதிமன்றம், திருச்சி அவர்கள் முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது. இதர நகல்களை சம்மந்தப்பட்ட மேல் அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகலை கோப்பில் வைக்கப்பட்டது.

Submitted to the Court of the Hon'ble Special Judge for the trial cases of the PC Act-1988, Trichy. Received this report at 10.30 hours on 14.12.18 and registered a case in Trichy V&AC Cr.No.05/2019 u/s 102 Cr.P.C and 7(A) of the Prevention of Corruption (Amendment) Act 2018 at 16.00 hrs on 19.03.2019.(Sd) F.Xavier Rani, 19.03.2019 (F.XAVIER RANI) Inspector of Police, V&AC, Trichy.

19/03/19
[F.XAVIER RANI]
Inspector of Police,
V&AC, Trichy.